17th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது தான் இப்போது சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது. கிராமங்களில் திருமணப் பதிவு செய்வதற்கு சப்-ரெஜிஸ்டிரார் இருக்கிறார், நகரசபை எல்லைகளுக்குள் முனிசிபல் கமிஷனர் இருக்கிறார், கோவில்களில் பதிவு செய்வதற்கு நிர்வாக அதிகாரி இருக்கிறார், சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் கார்ப்பரேஷனிலுள்ள ரெவின்யூ ஆபீஸர் இருக்கிறார். இவர்களுக்கெல்லாம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது கமிஷனர்களுக்கு இவ்வதிகாரத்தை கொடுக்கலாமா என்பது பற்றி அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

யூகலிப்டஸ் மரங்கள்

* 186 கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் எங்கெங்கு அரசினரால் யூகலிப்டஸ் மரங்கள் பயிரிடப்படுகின்றன ?

(இ) இவைகளுக்காக செலவழிக்கப்படும் தொகை என்ன ? வருமானம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) யூகலிப்டஸ் மரங்கள் நீலகிரியிலும் மேல் பழனியிலும் நடப்பட்டுள்ளன. யூலிப்ட்ஸ் கலப்பு இன மரங்கள் சென்னை, கன்னியாகுமரி, இராமநாதபுரம் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் நடப்பட்டுள்ளன.

(இ) யூகலிப்ட்ஸ் மரங்களுக்காக ஏக்கர் ஒன்றுக்கு 193 ரூபாயும் யூகலிப்ட்ஸ் கலப்பு இன மரங்களுக்காக ஏக்கர் ஒன்றுக்கு 116 ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.

யூகலிப்ட்ஸ் மரங்களிலிருந்து ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 1,500 ரூபாய் கிடைக்கிறது. யூகலிப்ட்ஸ் கலப்பு இன மரங்கள் அண்மையில்தான் நடப்பட்டுள்ளன.. இதுவரை விற்பனை எதுவும் செய்யவில்லை. இந்த மரங்களை நட்டதிலிருந்து 8 அல்லது 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவற்றிலிருந்து பயன் பெற முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், இப்போது யூகலிப்ட்ஸ் தழைகளை எடுத்து தைலம் காய்ச்சுவதற்கு மரங்களை வெட்டுவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. இதன் காரணமாக அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

கனம் திரு. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மரத்தை வெட்டிவிடுவதால் நஷ்டம் ஏற்படுகிறது. தழையை மட்டும் வெட்டிக் கொண்டால், அதிலிருந்து தைலத்தை காய்ச்சிக் கொள்ள முடியும்.

திரு. சா. கணேசன் : நீலகிரியில் யூகலிப்ட்ஸ் மரங்களை வெட்டிவிட்டு பலவகைப் பயிர் செய்கிற காரணத்தால், இந்தத் தொழிலுக்கு இடையூறு, வசதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையா ?

[17th August 1963

கனம் திரு. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : எல்லா மரங்களையும் வெட்டிவிடுவதாக இல்லை. சாதாரணமாக 10 வருடங்களுக்கு ஒருமுறை வெட்டி விடுவதால் தழை நிறைய கிடைக்கும்.

திரு. மா. இராசாங்கம் : ஸார், கொடைக்கானலில் யூகலிப்ட்ஸ் மரங்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தால், மேலும் யூகலிப்ட்ஸ் மரங்களை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

கனம் திரு. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : நான் முன்னுலேயே மேல்பழனி என்ற இடத்தைப் பற்றி குறிப்பிட்டேன். அது கொடைக்கானலைத்தான் குறிக்கிறது.

திரு. க. ர. நல்லசிவம் : யூகலிப்ட்ஸ் மரங்கள் எந்த சீதோஷ்ண ஸ்திதியில் நன்ருக வளரக் கூடும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : உதக மண்டலம், கோடைக்கானல் மேல் பழனி ஆகிய இடங்களில் யூகலிப்ட்ஸ் மரங்கள் நன்ருக வளருகின்றன. 'ப்ளெயின்ஸ்'-லே கலப்பு இன மரங்கள் (ஹைப்ரிட்) தான் வளருகின்றன. ப்ளெயின்ஸ் ஸிலே வளரக்கூடிய ஹைப்ரிட் யூலிப்ட்ஸ் மரங்கள் மலைப் பகுதிகளில் வளரும். ஆனல் மலைப் பகுதிகளில் வளரக்கூடியது ப்ளெயின்ஸில் வளராது. ஹைப்ரிட் யூகலிப்ட்ஸ் மரம் ப்ளெயின்ஸில் பயிர் செய்யப்படுகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அணைக்கட்டுப் பகுதிகளில் உள்ள ஃபாரஸ்ட் நிலங்களில் யூகலிப்ட்ஸ் மரங்களை அதிகமாக நட்டுக் கொண்டு வருகிருர்கள். யூகலிப்ட்ஸ் மரங்கள் தண்ணீரைப் பூமியிலிருந்து அதிகமாக உறிஞ்சிவிடுகின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியானல், யூகலிப்ட்ஸ் மரங்களை வைப்பதற்குப் பதிலாக, அணைக்கட்டுப் பகுதிகளில் நீர் சுரக்கும் மரங்களைப் பயிரிட அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அணைக் கட்டுப் பகுதிகளில் இத்தகைய மரங்களை நடுவது, மண் எல்லாம் கரைந்து அணைக்குள்ளே விழுந்து மூடிக்கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான். அந்தக் காரணத்தினுல்தான் சர்க்கார் அந்த முறையிலே செய்துகொண்டிருக்கிறது. கனம் நண்பர் அவர்கள் சொல்வதுபோல், மரங்களை நடாமல் விட்டுவிட்டால், கூடிய சீக்கிரத்தில் மண் நிறைந்து குழியை மூடிவிடும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, நீலகிரிப் பகுதி அல்லாத பிற மாவட்டங்களில் பயிரிடப்பட்டிருக்கிற யூகலிப்ட்ஸ் மரங்கள் நல்ல பலனைத் தரக்கூடும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறதா ?

17th August 1963]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: கனம் எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் ப்ளெயின்ஸில் வைக்கக்கூடிய மரங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். அவற்றி லிருந்து அதிகமாகத் தைலம் எதிர்பார்க்க முடியாது. விறகை உத்தேசித்துத்தான் அவற்றை அதிகமாக நடுகிறோம்.

சினிமாப்படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்படும் பொது இடங்கள்

* 187 கேள்வி.—திரு. கே. மூக்கையா தேவர் (திரு. ஆ. கு. சுப்பையா சார்பாக): கனம் செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் சினிமாப்படம் எடுக்க வாடகைக்கு விடப்படும் பிரதேசங்கள் எவை எவை?

(இ) இப்போது எவ்வளவு வாடகை வாங்கப்படுகிறது?

(உ) அதை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) & (இ) தற்போது வசூலிக்கப்படும் கட்டண விகிதங்களின்படி, தனிப்பட்ட அமைப்புக்களால் சினிமாபடம் எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ள அரசாங்கக் கட்டிடங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் பட்டியல்[a] சபை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம், ஐயா. தற்போது நாள் ஒன்றுக்கு ரூபாய் 10 வீதம் கட்டணம் வசூலிக்கப்படும் இடங்களில், கட்டணத் தொகையை அதிகரிப்பதற்கான யோசனைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. டி. கார்ச்சா கவுடர்: அமைச்சர் அவர்கள் இந்த மேஜை மீது வைத்திருக்கும் ஏடுகளில், உதகையில் உள்ள பொடானிகல் கார்டன்சிலும், கூனூரில் இருக்கும் ஸிம்ஸ் பார்க்கிலும் படம் எடுப் பதற்கு 500 ரூபாய் தான் ஒரு நாளைக்கு வாங்குவதாகப் போட்டி ருக்கிறார்கள். அழகான படங்களை எடுத்து லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிப்பதால் ஒரு நாளைக்கு 5,000 ரூபாய் என்று வசூலித்தால் நல்லதல்லவா?

கனம் திரு. கோ. பூவராகன்: இப்பொழுதிருக்கும் கட்ட ணத்தை உயர்த்துவதாக உத்தேசம் இல்லை.

Stopping of Mail trains at Morappur Station.

* 188 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state :

(*a*) whether the Government have taken steps to appraise the Central Government about the difficulties of the public by the non-stopping of the mail trains at Morappur Railway Station in Salem district; and

(*b*) if so, the results thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

---

[a] Printed as Appendix II on pages 367–370 infra.